Registered as a NewsPaper மக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 02 (14 - 04 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 56

## பத்திரிகைமீது வழக்கு; உயர் அதிகாரி நியமனம்

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம் பொலவின் அறிக்கை ஐலன்ட், சண்டே ரைம்ஸ் பத்திரிகைகளில் பிரசுரமானது தொடர்பாக அப்பத்திரிகைகளின் மீது அவசரகாலச்சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரப் பிரத்தியேகமாக அரசு ஓர் உயர் மட்ட அதிகாரியை நியமித்திருப்பதாகத் தெரிய வருகிறது. வியாழனன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அத்த (3 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு இராணுவ அமைப்பில் பதவி அதிகார மாற்றங்கள்

## இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவு பொதுஅறிவுத்தேர்வு விடைத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாவிற்கு கொப்பேகடுவ

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ அமைப்பிலும், அதிகாரிகள் தரத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, கூட்டுப் படைத் தலைமையகத்தின் பொறுப்பில் இராணுவ நடவடிக்கைகள் இருந்தபோது வட பகுதியின் இணைப்பதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் இப்போது யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை இணைப்பதிகாரி என்ற பதவி வலுவிழந்து போயுள்ளது.

புதிய அதிகார மாற்றத்தைத் தொடர்ந்து வடமாகாணத்திற்கென இரு உயர் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இதுவரை வடமாகாணத்தின் இணைப்பதிகாரியாக ஒருவரே இருந்து வந்தார், புதிய நியமனங்களின்படி யாழ். மாவட்டத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ தளபதியாகவும் வவுனியா பிராந்தியத்திற்கு மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா தளபதியாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ். மாவட்ட தளபதியாக இருந்த விஜெயவிமலரட்னா கிழக்கு மாகாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளார், வேறு பல பிரிகேடியர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுப்படை நடவடிக்கை தலைமைச் செயலகத்தின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ உயரதிகாரிகளின் பொறுப்புகளிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரனின் சகோதரியை பெற்றோரே முன்வந்து போராட அனுப்பினர்

மன்னாரில் லெப்டினன்ட் சைமன் என்ற மாவீரனின் சகோதரி கபிரியல் கரோலின் என்பவரை அவரது பெற்றோர் போராட்டத்தில் தாமாகவே முன்வந்து இணைத்துள்ளனர்.

அடம்பன்தாழைக்குளத்தைச் சேர்ந்த லெப் சைமனின் பெற்றோர் கடந்த ஐந்தாம் திகதி மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளரிடம் இவரை ஒப்படைத்தனர்.

லெப். சைமன் இந்தியஇராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவர்.

## நூற்றுக்கும் மேற்பட்டோர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அனுமதி அட்டையைப் பெறவில்லை எனக் கூறப்பட்டு சிறிலங்கா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மட்டும் 100க்கும் அதிகமானோர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 30 வயதுக்குட்பட்ட எவரும் விடுதலை செய்யப்படவில்லை விடுதலை செய்யப்படாதவர்களில் பெண்களும் அடங்குவர்.

தாண்டிக்குளத்தில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் அனுமதி அட்டை பெறச் சென்றவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## போர்க் களத் தலைமைப்பீடம் வவுனியாவில் அமையலாம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளைக்கவனிக்க 'போர்க்களத் தலைமைப்பீடம்' ஒன்றை அமைப்பதில் இராணுவத் தலைமைப்பீடம் தீவிர அக்கறை கொண்டுள்ளது.

இராணுவ அதிகார அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து, அதிகாரங்கள் பலவற்றைப் பெற்றுள்ள இராணுவத் தலைமைப்பீடம் போர்க் களத்திற்கு அண்மையில் போரைவழி நடத்தவும், கண்காணிக்கவும் கூடிய ஓர் தலைமையகம் இருக்க வேண்டும் எனக் கருதுவதாகத் தெரிகின்றது.

இப் போர்க்களத் தலைமையகத்திற்கான நிலையமாக வவுனியா, திருக்கோணமலை, அனுராதபுரம் ஆகிய மூன்று நகரங்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ள அதே வேளை அநேகமாக வவுனியாவிலேயே இத் தலைமையகம் அமையலாம் எனவும் இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

## ஒருதலைப் பட்சதீர்வு பலனைத் தராது — பிரேமதாசா

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தலைப்பட்சமான தீர்வு ஒருபோதும் பலனைத் தராது இது நிலைமையை மேலும் மோசமாக்கும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதீர்வொன்றே இதற்குக் காணப்படவேண்டும். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா காலியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் நாட்டை சீர்குலைக்க சில சுயநலவாத சக்திகள் முயற்சிப்பதாகவும்எச்சரித்தார். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கான தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ளது என

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நிர்வாக சேவைத்திட்டம் வடக்குகிழக்கில் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

புதிய நிர்வாக சேவைத் திட்டம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

புதிய நிர்வாக சேவைத் திட்டத்தின்படி நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் நிர்வாக நடைமுறைகள் மேற்படி பகுதிகளில் காலவரையறையின்றி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி புதிய நிர்வாக சேவைத்திட்டத்தின் கீழ் இப்பகுதிகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக அம்சங்கள் மற்றும் நடைமுறைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிர்வாக நடைமுறைகளும் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்கள் மினிக்கச்சேரிகளாக ஏற்கனவேமாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் இவற்றுக்கு புதிய அரசாங்க அதிபர்களை நியமிப்பதற்கு பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் இம்மாத ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது இதற்காக மேற்படி பதவிகளுக்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்கு தற்காலிக வகுப்பறை

(வடமராட்சி கிழக்கு)

இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு பாடசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியினைத் தீர்க்கும் முகமாக செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தற்காலிக வகுப்பறைகளை அமைக்க யாழ். செயலக திட்டமிடல் பிரிவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வட்டவை பிரிவில் இன்று சாமியன் அரசடிச் சந்தியில் தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

அடையாள உண்ணாவிரதம் காலை 8 00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை இடம் பெறும்.

பிற்பகல் 7 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பரா, ஜவான், சுடர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## பலம் கொண்ட இராணுவத்தையும் எதிர் கொள்ளும் திடம் உடையவர்

### புலிகள் பற்றி இந்திய இராணுவ அதிகாரி

(யாழ்ப்பாணம்)

''பலம் வாய்ந்த எந்த இராணுவ அணிகளையும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளத் தக்க மனோபலம் விடுதலைப் புலிகளுக்கு உண்டு. தமதுநோக்கம் ஈடேறும் வரை பலம்வாய்ந்த எந்த இராணுவ அணிகளின் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்துச் செயற்படுவார்கள்'' இவ்வாறு இந்திய இராணுவ அதிகாரி அர்ஜுன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில சஞ்சிகையொன்றில் ''தமிழீழ விடுதலைப்புலிகளின் நோக்கம் ஒரு நடுநிலைக் கணிப்பு'' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு, வவுனியா, மாங்குளம், முல்லைத்தீவு, அளம்பில் ஆகிய இடங்களில் இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயிருந்தவர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



### மேஜர் சுபாஸ்

(புண்ணியமூர்த்தி உதயகுமார்)

வீர உதயம் 03.03.1965 — வீரச் சாவு 14.04.1989

ஆலடிச் சந்தியில் விபத்து நிகழ்ந்து
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தன
தாயகத் தமிழீழம் மீட்டு
தன் சந்ததி தலை நிமிர்ந்து வாழ
இந்திய இராணுவ முகாமழிக்க
இன்பமாய் நீ சென்றவேளை
உனை நாம் பிரிந்தோம்
எண்ணியே நிதம்வாடுகின்றோம்
மாறாது உன்னுருவம் மனதைவிட்டு
அழியாது பாச நினைவுகள் நெஞ்சைவிட்டு.

14-04-1992 இன்று நவாலி வடக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
14.04.1992. (2459)

பெற்றோர்,
சகோதரர்,
நண்பர்கள்.

## எளிமையான முறையில் புத்தாண்டு

குடாநாட்டில் நேற்று (13-4.92) தமிழ்ப் புத்தாண்டை மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர்.

ஆலயங்களுக்குச் சென்று பூசை, தேர்த்திருவிழாக்களை தரிசித்ததுடன் இல்லங்கள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள், வங்கிகளில் கைவிசேஷங்களும் பரிமாறப் பட்டன.

ஆடம்பரம் இல்லாமல் மிக எளிமையாகவும், அமைதியாகவும் மக்கள் புத்தாண்டை நேற்றுக்கொண்டாடினர்.

## உரும்பராயில் போர்த் தேங்காய் அடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் பண்டைய பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் நேற்று உரும்பராய் அன்னமார் கோவில் மைதானத்தில் புத்தாண்டு நிகழ்வாக போர்த்தேங்காய் அடித்தல் இரு அணிகளுக்கிடையில் மிகவும் பரபரப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் ஒவ்வொரு அணி சார்பிலும் சுமார் 100 தேங்காய்கள் வரை அடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)

### ஒருதலைப்

வும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிரந்தரமான அமைதியைக் கொண்டுவர இறுதியான தீர்வொன்று காணபபடவேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

அத்துடன், சுயநல நோக்கத்துடன் உள்ள பலர் பொது மக்களை கிளர்ச்சிக்கும், குழப்பத்திற்கும் வஞ்சக நோக்கத்துடன் இட்டுச் செல்வதாகவும், குழப்பநிலையையும், ஒழுங்கின்மையையும் ஏற்படுத்த முயல்வதாகவும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி அப்புத்துரை

12-04-92 ஞாயிறு நடைபெற இருந்த திருமதி பூமணி அப்புத்துரையின் ஈமக்கிரியைகள் நாளை 15 04.92 புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:
71/3 புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். பிள்ளைகள், மருமக்கள் (2467)

## நினைவு கூருகின்றோம் 1992-04-14

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழகம் நோக்கிச் செல்லும் வழியில் தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். தவேந்திரன் (அமிர்தலிங்கம் சுந்தரகுமார் - லிங்கநகர், திருக்கோணமலை.

நடேஸ் மாமா (முத்தையா நடராசா - பொலிகண்டி, வல்வெட்டித்துறை.)

சுசி (திருக்கோணமலை)

சுனில் (திருக்கோணமலை.)

நேரு (திருக்கோணமலை.)

ரமணன் (முத்துசிவபாலன் அடம்பன், மன்னார் )

செல்வன் (பிலிப்பு பெனடிற் - ஆட்காட்டிவெளி, அடம்பன், மன்னார் )

கணேஸ் மாமா (கந்தசாமி கணேசமூர்த்தி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை.)

சண் (சற்குணராசா - சிறுப்பிட்டி.)

சுதா (முத்துசாமி சுதாகர் - ஊறணி, வல்வெட்டித் துறை )

பாபு (செல்வக்குமார் - கண்டாவளை, கிளிநொச்சி.)

கமல் (அர்ச்சுனராசா நந்தகுமார் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை )

திலீபன் (பொன்னுத்துரை யோகசிங்கம்-மயிலிட்டி.)

தம்பி (வேலுப்பிள்ளை இராசகோபால் - சர்வோதயா வீதி, ஆவரங்கால்.)

லிங்கராசா (சந்தான் எலியாஸ் - அடம்பன், மன்னார் )

1988 ஆம் ஆண்டு கருவேலங்கண்டலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

ராதா (வேலுப்பிள்ளை சிவானந்தன் - பட்டிக் குடியிருப்பு )

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

இளங்கோ (ஆழ்வாப்பிள்ளை ரவீந்திரன் - ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு )

யாழ் கந்தர்மடம், ஆலடிச்சந்திப் பகுதியில் இந்தியப்படையினரின் முகாமொன்றினைத் தகர்க்க வெடிமருந்து அடங்கிய வாகனத்தைக் கொண்டு செல்லுகையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

வலிகாமம் பொறுப்பாளர்

மேஜர் சுபாஸ் (புண்ணியமூர்த்தி உதயகுமார் - நவாலி வடக்கு, மானிப்பாய் )

கப்டன் சிறிஅண்ணா / தாடி சிறி (முத்துராசா அரியரட்ணம் சிறிதரன் - சண்டிலிப்பாய் வடக்கு.)

லெப். கரன் / சூட்டி (நல்லையா பாஸ்கரன் - 25, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி.)

லெப். அல்பேட் (மருதப்பு இராசகுமார் - 26/4, மலர்மகள் வீதி. அரியாலை.)

இதே சம்பவத்தின் போது சாவடைந்த 6 பொது மக்கள்.

வதிரியில் தேச விரோத சக்திகளால் வெட்டிக் கொல்லப்பட்ட இருதயாக் கல்லூரி மாணவ தலைவனான வல்வெட்டித்துறை, சமரபாகு வாசி.

இதே ஆண்டு இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கரம்பன் மேற்குப் பகுதி கிராம சேவகர்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

கப்டன் காண்டீபன் (சந்தியா மார்க் அல்பேட் மார்க் - வங்காலை, மன்னார்.)


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

## 3 ஆம் வருட நினைவஞ்சலி

ஜனனம்: 18.12.1968

வீரச்சாவு: 14 04-1989



### லெப்ரினன்ட் கரன்

(ந. பாஸ்கரன், சூட்டி)

உன் உயிர் கலந்து சென்ற
காற்று இருக்கும் வரையில்
நீ அணைத்துக் கொண்ட இந்த
மண் இரு கும் வரையில்
உன் பெயர் இங்கு நிலைத்திருக்கும்

— குடும்பத்தினர்

25, கரன் வீதி (பலாலி வீதி)
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம். (2450)

## சிந்தனைக்கு

நாம் இருக்கும் இடம் முக்கியமல்ல எந்தத் திக்கு நோக்கிச் செல்கிறோம் என்பது தான் முக்கியம்.

-லியோ டால்ஸ்டாய்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 14-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ எண் 05

# இராணுவத் தளபதியின் புதிய மிரட்டல்

கிழக்கு மாகாணத்தில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் விடுதலைப் புலிகளை விரட்டியடித்துவிட்டு, சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கும், தேர்தலை நடாத்துவதற்கும் தன்னிடம் திட்டம் உள்ளதாகச் சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அறிவிப்புகள் காலத்திற்குக் காலம் இராணுவத் தளபதிகளாகவும், பாதுகாப்பு அமைச்சர்களாகவும். சிலவேளை ஜனாதிபதியாலும், பிரதம மந்திரிகளாலும் கூறப்படும் கூற்றுக்களே. 1979 ஆம் ஆண்டு வடகிற்கு அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனாவால் நியமிக்கப்பட்ட பிரிகேடியர் வீரதுங்காவும் இதையே குறிப்பிட்டார். மூன்று மாதத்திற்குள், வடக்கில் நிலவும் ''பயங்கரவாதத்தை'' அடியோடு ஒழிப்பேன் என்றார்.

அவரால் அதைச் செய்ய முடியவில்லை. மாறாகப் போராட்டம் வளர்ந்ததே ஒழிய அழிக்கப்படவில்லை. ஆனால் அப்பொழுது போராளிகள் எனச் சொல்லிக்கொள்ளப்பட்டவர்கள் சில பேரே இருந்தனர். அவர்களிடம்பெரியளவில் ஆயுதங்களோ, வெடிப்பொருட்களோ அவற்றைப் பயன் படுத்துவதற்கு போதியளவு பயிற்சிகளோ இல்லை ஒருசிலகைத்துப்பாக்கிகளே இருந்தன. ஆனால், அவர்களை பிரிகேடியர் விஜயதுங்காவினால் அணுகமுடியவில்லை. ஆனால், அன்றும், அவர் படுகொலைகள் மூலமே தமிழீழப் போராட்டத்தை நசுக்க முடியும் என நம்பினார். பலரைப் படுகொலை செய்து வீதியில் வீசினார். ஆனால் பலன் எதுவும் கிட்டவில்லை. படுகொலையைக் கண்டு மக்கள் அஞ்சவில்லை ஆனால் போராட்டத்திற்கு முன்னரைவிட ஆதரவு பெருகியது.

தற்பொழுது லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணா போராட்டத்தை ஒடுக்க காலக்கெடு விதித்துள்ளார். அத்தோடு இவரின் திட்டத்தின்படி போராளிகளை ஒடுக்கிடும் நடவடிக்கையில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்படுவார்கள் என இராணுவ வட்டாரங்களிலேயே பேசப்படுகின்றது. அவ்வாறானால் மொத்தமாக பொதுமக்களை படுகொலை புரிவதன் மூலம் அதில் போராளிகளும் சிக்குவார்கள் என்பது தளபதியின் திட்டம்போல் தெரிகிறது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணவின் கடந்தகால நடவடிக்கையை நோக்கும்போது அவர் இவ்வாறானதொரு வழியைக் கடைப்பிடிக்க மாட்டார் என்று சொல்வதற்குஇல்லை ஏனெனில் அவர் தென்னிலங்கையில் ஜே வி. பி கிளர்ச்சியின் போது இவ்வாறான எழுமாற்றான கொலைகள் பலவற்றை மேற்கொண்டவர் எனவும் ஜே. வி. பி. யினரின் கணிசமான மரணத்திற்குக் காரணமாகவும் இருந்தவர்.

ஆனால் இவரின் அனுபவமும் அணுகுமுறையும் எந்தளவிற்கு தமிழ்மக்களுக்கும், புலிகளுக்கும் எதிரான போரில் வெற்றியளிக்கும் என்பதே கேள்விக்குரியதாகும். லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணாவின் எந்தத்திட்டத்தினாலும் மூன்று மாதத்தில் விடுதலைப் புலிகளை கிழக்கில் ஒழித்து விடவோ வெளியேற்றி விடவோ முடியாது என கூட்டுப் படைத்தலைமைத்தளர்த்தா ஜெனரல் ஹமில்டன்வனசிங்கா தெரிவித்துள்ளார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் கணிப்பு அனுபவ ரீதியானது இனப்பிரச்சினையினதும், விடுதலைப்புலிகள் பற்றியதுமான சரியான கணிடபில் எழுந்ததாகும். நீண்டகாலமாக புலிகளுக்கு எதிராகப் போரிட்டவர் சிறிலங்கா அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் குறித்தும் நன்கு அறிந்தவர்.

ஆனால் இவை யாவற்றையும் புறக்கணித்து தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் முழுமையாகப் பயன் படுத்தி புலிகள் அழிப்பு நடவடிக்கை என்ற போர்வையில் பொதுமக்கள் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை இராணுவத் தளபதி கட்டவிழ்த்து விடுவாரானால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் இராணுவத் தளபதியே பதில் சொல்லியாகவேண்டிய நிலை ஏற்படும். அத்தோடு ஜே வி. பி. தலைவர்களை ஜீப்பில் சென்று ஏற்றி வந்து கொன்றொழித்ததுபோல் விடுதலைப் புலிப் போராளி ஒருவரைத்தானும் அணுகிவிட முடியாது என்பதும், சிறிலங்கா இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதலை விடுதலைப் புலிகள், ஆயுதத்தைக் கீழே வைத்துவிட்டு கைகட்டிப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள் எனவும் எண்ணிவிடக்கூடாது.

# தமிழ் நாட்டில் தற்கொலைப் படை; இது ஒரு கற்பனைச் செய்தி

## தமிழக பொலிஸ் அதிகாரி

(சென்னை)

தமிழ் நாட்டில் தற்கொலைப் படையினரின் ஊடுருவல் பற்றி எந்தவிதமான உறுதியான தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என தமிழ் நாடு காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கற்பனையான செய்தி எனவும் அவர் மேலும் தெரிவித்தார். தமிழ் நாட்டில் ஐந்து பேர் கொண்ட தற்கொலைப் படை ஊடுருவியுள்ளதாகவும் அதற்கு கணேசன் என்பவர் தலைவராக இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. தற்கொலைப் படையினரின் எண்ணிக்கையும் தலைவரின் பெயரையும் கற்பனை செய்து வெளியிட்டமை பெரும் வியப்பு அளிப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். கணேசன் என்ற பெயரில் எந்த ஒரு போராளியின் பெயரும் தமது குறிப்பில் இல்லை எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டசபையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவும் தன்னைக் கொலை செய்யவும் ராஜீவ்காந்தி கொலையை புலனாய்வு செய்யும் குழுவின் தலைமையகத்தைத் தகர்க்கவும் தற்கொலைப் படை வந்துள்ளதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# ஊடுருவலைத் தடுக்க புதிய திட்டம் அமுல்

(சென்னை)

தமிழ்நாட்டில் போராளிகள் ஊடுருவலை தடுக்கவும், டீசல் கடத்தலை நிறுத்தவும் புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் திட்டத்தின்படி இராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் மீன்பிடிப் படகுகள் யாவும் திடீரென சோதனையிடப்படும். தினமும் அதிகாலையிலும் இரவிலும் நாளொன்றுக்கு 50 படகுகள் வரை சோதனையிடப்படும்.

இதற்கென 11 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது இந்தக் குழுவில் இந்தியக் கடற்படை, மாநில வருவாய், காவல், மீன்வள துறை பிரதிநிதிகள் அடங்குவர்.

இந்த புதிய திட்டம் வரும் வியாழன் முதல் செயற்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# ஈழத்தமிழர் கல்வியை பறிக்க வேண்டாம்

(சென்னை)

ஈழத் தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்புக்களைப் பறிக்க வேண்டாம் என்று பதின் நான்கு பிரமுகர்கள் தமிழக மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த பதின்நான்கு அறிஞர்கள் விடுத்துள்ள கோரிக்கை ஒன்றிலேயே இது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ரஷ்ய அமைச்சரவை இராஜினாமா

ரஷ்ய அமைச்சரவை இராஜினாமாச் செய்துள்ளது. அரசின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மிகத் தீவிரமாகவே மாற்றும்படி கோரி பாராளுமன்றம் அரசுக்கு உத்தரவிட்டதை ஆட்சேபிக்கும் வகையிலேயே ரஷ்ய அமைச்சரவை இராஜினாமாச் செய்துள்ளது.

பொறிஸ் யெல்சின் பிரதம மந்திரியாகத் தொடர்ந்து பதவியிலிருப்பதற்கு அவருக்கு மூன்று மாதம் மட்டுமே அளிப்பதான ஏற்பாட்டையும் அமைச்சரவை ஆட்சேபித்திருக்கிறது.

ரஷ்யாவின் முதலாம் துணைப்பிரதம மந்திரி ஏகாட்கைதார் நேற்றைய தினம் மொஸ்கோவில் செய்தியாளர் கூட்டமொன்றில்பேசும்போது அமைச்சரவையின் இந்த முடிவை வெளியிட்டார்.

# அதிகாரத்தில் இருக்க நாம் போராடவில்லை

## -காமினி

(கண்டி)

நாங்கள் பல ஆண்டுகள் அதிகாரத்திலும் உயர்பதவிகளிலும் இருந்தவர்கள் எனவே நாங்கள் இன்று போராடுவது அதிகாரத்தைப் பெறவேண்டுமென்பதற்காகவோ, உயர் பதவிகளைப் பெறவேண்டுமென்பதற்காகவோ அல்ல என்று முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்க கூறினார்

கண்டி மாவட்டத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அலுவலகத்தைத் திறந்து வைத்த வைபவதித்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவுமே போராடுகின்றோம். உரிமைகளையும், மனிதப் பெறுமானங்களையும் ஒருமுறை பெற்றுக் கொண்டால் அதனை எதிர்காலச் சந்ததிகளுக்கு பாதுகாப்பாகக் கையளிக்கவே எமது வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

### பத்திரிகை

பத்திரிகைக்கு எதிராக வழக்குத்தொடரப்பட்டது. மேலும் பல வழக்குகள் தொடரப் படவிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளாராம்

வெள்ளியன்று பொலிஸ்மா அதிபர் ஏணெஸ்ட் பெரேரா பிரதி சட்டமா அதிபரைச் சந்தித்து உடுகம்பொல விவகாரம் சம்பந்தமாக ஆலோசனை கலந்தார். உடுகம்பொலவின் அறிக்கை மக்கள் மத்தியில் அரசுக்கெதிராக அதிருப்தியை ஏற்படுத்துவதோடு, மக்களில் ஒரு பகுதியினரிடையில் எதிர்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்தக்கூடியது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்

உடுகம்பொலவின் அறிக்கையைப் பத்திரிகையில் வெளியிட்டமை பீனல்கோட் 120-வது ஷரத்துக்கும், அவசரகாலச்சட்டம் 26-வது ஷரத்துக்கும் முரணானது என்றும் அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இக்குற்றத்திற்கான தண்டனை 3 முதல் 20 வருடங்களுக்கு மேலாக கடுழியச் சிறையும், தண்டப்பணமுமாகும்

இதேவேளை பீனல்கோட் சட்டத்தின் கீழ் இதற்கான தண்டனை இரண்டு வருடச் சாதாரண சிறையாகும்.

# மகரகம குண்டு வெடிப்பு சு. க. ஆதரவாளர் கைது

[கொழும்பு]

அம்பாறையிலும், மகரகமவிலும் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக புதிய தகவல்கள் கிடைத்திருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும், ஆதரவாளர் ஒருவர் கைது செயயப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் தொடர்வதால் மேலதிக தகவல்கள் வெளியிடப்பட முடியாமல் இருப்பதாகவும் பொலிசாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடுகம்பொல சார்பில் இரண்டு ஆட்சேப மனுக்கள்

(கொழும்பு)

முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவை குற்றபுலனாய்வுத்திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது என தீர்ப்பளிக்கும்படி உடுகம்பொலவின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆட்சேப மனு ஒன்றைச் சமர்பபித்துள்ளார்.

அத்துடன் லியனாராச்சி கொலை வழக்கில் ஒருசாட்சி என்ற வகையில் அவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட முடியாது. எனவே இந்த உத்தரவை இரண்டுமாதங்களுக்காயினும் விலக்குமாறும் அவர் ஆட்சேப மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

### இடம்

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமினால் ஆழியவளையில் இயங்க முடியாதுள்ள ஆழியவளை சீ. சீ. தமிழ் கலவன் பாடசாலையும் செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலேயே இயங்கி வருகின்றது.

தற்காலிக வகுப்பறை அமைக்கும் வேலைகள் இம் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது (36)


# பசவ புன்னையா மரணம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முது பெரும் தலைவர்களில் ஒருவரான பசவ புன்னையா நேற்று முன் தினம் புதுடில்லியில மாரடைப்பால் காலமானார். ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசவ புன்னையாவிற்கு வயது 77 ஆகும். 1952 ஆம் ஆண்டு முதல் பதினான்கு ஆண்டு காலம் ராஜ்ய சபா உறுப்பினராக இருந்தார்

### பலம்

விடுதலைப் புலிகளையும் அவர்களின் அமைப்பையும் புரிந்து கொள்ள தமது கட்டுரை உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 31-ம்நாள் நினைவஞ்சலி



(2469)

அமரர்

### வெற்றிவேலு சுப்பிரமணியம்

மலர்வு 21.03:1912 உதிர்வு 15:03·1992

திதி. 14-04-1992

அன்புமிகு துணைவனாய்
பாசமிகு தந்தையாய்
பண்புமிகு மாமனாய்
பரிவுமிகு பேரனாய்
பாரினில் எல்லோர்க்கும் இனியனாய்
வாழ்ந்து இறைவனடி சேர்ந்த தங்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்

இராசவீதி, அன்பு மனைவி, மக்கள்
கோப்பாய் மத்தி. மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 3-ம் ஆண்டுநினைவஞ்சலி



### அரியரட்ணம் சிறீதரன்
(தாடி சிறி)

ஜனனம்:- 03-01·1959 மரணம்: 14-04-1989

அவனியினை விட்டுச்சென்று ஆண்டு மூன்று
ஆகிடினும் ஐயா உன் பிரிவினாலே
ஆறிடாது மனதில் என்றும் ஆட்டம் கண்டோம்
ஆண்டு மூன்று ஆகு முன்னர் உன் அண்ணனோடு
ஆரணியும் சேர்ந்தங்கு வந்ததாலே
ஏணிதனை இழந்து விட்டோம் ஏமாற்றந்தான் வாழ்வில்
ஏன் இந்தக் கொடுமை என்று விளங்கவில்லை
இயற்கையிலே இறப்பு ஏதோ உண்மையென்றாலும்
நீங்கள் இறந்த விதம் எம்மனதில் ஓர் பூகம்பம்தான்
விதியினுக்கு ஓர் விதி விலக்கு உண்டேயாகில்
விலைமதிக்க முடியா தெங்கள் மாணிக்கங்களை
விட்டிருக்க மாட்டோம் ஆனால் விதியினுக்கு
விதி விலக்கில்லை என்று சொல்வதாலே
விடிவிற்கு வித்தாகி விட்டீர் என்று
விளங்கியே எம்மனதை ஆற்றுகின்றோம்:

சண்டிலிப்பாய் குடும்பத்தினர், உற்றார்,
வடக்கு உறவினர்,
சண்டிலிப்பாய் நண்பர்கள்.

(2444)

## புதிய உயர் கல்லூரி
## New College of High Studies

ஆரியகுளம் சந்தி - யாழ்.

A/L.94 ஆரம்பம் - 18-04-92


பொருளியல் — லோகசிங்கம்
கணக்கியல் — யோகராஜா
வர்த்தகம் — தேவா, பசீல்
அளவியல் — மகேந்திரன்
புவியியல் — குணராஜா
தமிழ் — மீரா, அரசியல் — கியூபேட்
வரலாறு-நாகராணி இந்துசமயம்-தயாளன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை

### பிரிவு - 1 மட்டுமே

ஆதலால் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

(சி/4260) நிர்வாகி: S. அருள்நங்கை

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

### லெப். அல்பேட் (ராஜ்குமார்)

தாயின் மடியில் 09-10 1970 வீரச்சாவு 14-04-1989

ஆலடிச் சந்தியில் குண்டுபட்டு வீரச்சாவை அடைந்து மூன்று ஆண்டுகள் முடிந்தும் உமது நினைவு எங்களைவிட்டு அகலாது.

உமது ஆத்மா சாந்தியடையட்டும்.

தாய், அக்கா, அண்ணன்மார்,
மச்சான், மைத்துனிமார்,
மலர்மகள் வீதி, மருமக்கள் பெறாமகன்
அரியாலை. உறவினர்கள்.

(2457)

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை யுவக்கீன்பிள்ளை

மண்டைதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வஸ்தியாம்பிள்ளை யுவக்கீன்பிள்ளை (அப்புத்துரை) 13-04-1992 இல் மாதகலில் காலமாகிவிட்டார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற வ. சூசைப்பிள்ளை (நட்சத்திரம்), காலம் சென்ற வ. அன்ரனி பெர்னாண்டோ (ஐயா). மேரியம்மாஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம் சென்ற ம. மனுவற்பிள்ளை, ம. சாமிநாதர், ம. தொன்மைப்பிள்ளை, ம. சவிரிமுத்து, ம. பாவிலு பிள்ளை (இளைப்பாறிய கிராமசேவகர் மாதகல்) திருமதி சி. அருளம்மா, திருமதி இ. திரேசம்மா ஆகியோரின் மைத்துனரும், திருமதி பா. லூசியாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14-04-1992 இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. பாவிலுப்பிள்ளை
(மாதகல்)

(2458)

### இன்று

தாள் திருத்தும் வேலை முன்னர் அறிவித்தபடி வடமராட்சியில் இன்று நடைபெறாது.

வடமராட்சி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

### புதிய

ஆட்சேர்க்கும் நோக்குடன் வர்த்தமானி விளம்பரம் ஒன்றும் விடுக்கப்பட்டது.

ஆனால் இறுதி நேரத்தில் இம்முயற்சி கைவிடப்பட்டுள்ளது

மேலும் மேற்படி நிர்வாக சேவைத்திட்டத்தின் கீழ் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு என்ற அடிப்படையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்போது உள்ள கிராமசேவகர் பிரிவுகள் மேலும் பிரிவுகளாக பிரிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக மேலதிக கிராம சேவகர்களை தேர்ந்தெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டமும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது,

அத்துடன் புதிய நிர்வாக சேவைத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ள ஏனைய சில நிர்வாக நடைமுறைகளும், அச்சங்களும வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படாமல் இடைநிறுத்தப் பட்டிருக்கிறது.

### அதிகார பரவலாக்கல் தடைப்படும் ஆபத்து!

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட சில அதிகாரப் பரவலாக்கல் திட்டங்கள் அனைத்தும் மேற்படி புதிய நிர்வாக சேவைத் திட்டங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதிக்கப்படும் ஆபத்து நிலை உருவாகியிருக்கிறது அதிகாரப்பரவலாக்கல் திட்டங்களைஇலகுவாக நடைமுறைப் படுத்துவதற்காகவே புதிய நிர்வாக சேவைத் திட்டம் அரசினால் அறிமுகப்படுத்தப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (க)

### வட—கிழக்கு

இந்த மாற்றங்களின் படியே டென்சில் கொப்பேகடுவ வின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்ட எல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டு அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து இவ்வருட முடிவிற்குள் விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதாக முப்படைகளின் தளபதிகளும் உறுதி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மரண அறிவித்தல்

கே. உருத்திரலிங்கம்

நாரந்தனை வடக்கைச் சேர்ந்தவரும், தற்போது உருத்திரபுரத்தில் வசிப்பவர்களுமாகிய கேதாரநாதன் இந்திராணி தம்பதிகளின் புதல்வன் உருத்திரலிங்கம் என்பவர் 12 - 04 - 92 அன்று கிளிநொச்சி வைத்தியசாலையில் மரணமானார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
[2468] ந. கேதாரநாதன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.